முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 68/2019

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 3 ம் நாள் புதன் கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | செல்வன் | **சமயம்** | : | -- |
| **த/பெ** | : | தங்கசாமி | **வயது** | : | 56 |
| **கிராமம்** | : | -- | **தொழில்** | : | -- |
| **வட்டம்** | : | -- | | : | |

**பி.வா.சா.1: 10 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எனது தகப்பனார் தங்கசாமி 2010 ம் வருடம் காலம் சென்றார் என்றால் சரிதான் . தங்கசாமி நாடார் இறந்த 16 ம் நாள் விஷேசத்திற்கு அவரது உறவினர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். அதில் நாங்கள் அனைவரும் இணைந்து பேசினோம் என்றால் சரிதான். வாதிகளும், 6 ம் பிரதிவாதியும் தங்களுக்கு எந்தவித சொத்தும் வேண்டாம் என்று வாய்மொழியாக விட்டு கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்னார் 1 முதல் 5 பிரதிவாதிகள் சேர்ந்து கூட்டாகசொத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2) வாதிகளும், 6 ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை உங்கள் தகப்பனார் தங்கசாமி நாடார் இறந்த பின் 12 வருடங்கள் கழித்து இந்த பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால்

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.03 17:36:42 +0530

சரிதான். 12 வருடங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.03 17:36:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்